1996 ஆகஸ்ட் 21]

202—

கொடைக்கானலை அழகுபடுத்தும் திட்டம்

***1355—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. இரா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைகளின் இளவரசி என்று போற்றக்கூடிய கொடைக்கானலை சர்வதேச சுற்றுலா மையமாக அமைக்கக்கூடிய நிலை தமிழக அரசிலே இருக்கிறதா? அப்படி இல்லையென்றால் சர்வதேச சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான ஒரு நிலையை எப்போது ஏற்படுத்தித் தருவார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலைப் பொறுத்தமட்டில் சுற்றுலா ஸ்தலமாகத்தான் விளங்கிக் கொண்டிருக்கிறது. சர்வதேச சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டிய நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 203, திரு. சி. கோபு, மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

203—

கைத்தொழிலுக்கு மூலப் பொருள்

***429—திரு. சி. கோபு:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1996 ஆகஸ்ட் 21

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதிவாழ் அருந்ததியரின் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

திரு. சி. கோபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுத் தொகுதியில் அணைக்கட்டு, அப்புக்கல், கங்கநல்லூர், சீலேரி, கம்மார்பாளையம், ஏரியூர், கல்ஓடை, ஆரிமலை போன்ற பகுதிகளில் அருந்ததியினர் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுடைய கைத்தொழில் கூடை முடையும் தொழில் தான். அதற்கு மூலப்பொருள் மூங்கில். அணைக்கட்டில் ஒரு கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அது செயல்படாத நிலையில் இருக்கிறது. அந்தச் சங்கத்தை நல்லமுறையில் செயற்படுத்தி அதன் மூலமாக அவர்கள் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளான மூங்கில் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருந்ததியினர் இனத்தைச் சேர்ந்தவர்கள், கைவினைஞர்கள் பெரும்பாலும் காலணித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். காலணித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள் பல வட ஆற்காடு–அம்பேத்கர் மாவட்டம் வேலூருக்கு அருகில் உள்ள வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளில் இயங்கி வருகின்றன. மேலும் தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்தின் தோல்கள் தயாரிக்கும் அலகு ஒன்று வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலத்தில் இயங்குகிறது. அங்கு மொத்த விற்பனை, சில்லறை விற்பனை நடைபெறுகிறது. எனவே, காலணித் தொழிலில் ஈடுபடும் கைவினைஞர்கள் தங்களுக்குத் தேவையான சிறிய அளவு முதலீட்டில் அருகில் உள்ள தனியார் நிறுவனங்களில் கொள்முதல் செய்து வருகிறார்கள். கூடை முடைவோர் சம்பந்தப்பட்ட தொழிலும் கதர்த் துறை வாரியத்தின்கீழ், இயங்குவதால் அதுபற்றி அரசின் ஆய்வில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 21]

திரு. சி. கோபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருந்ததியினர் பக்கத்தில் இருக்கிற ஆந்திர மாநிலம், ஒரிசா மாநிலம் போன்ற இடங்களில் இருந்து தனியார்கள் கொண்டு வருகின்ற மூங்கில்களை எடுத்துச் சென்று அந்த மூங்கில்கள் மூலமாக கூடை முடையும் தொழிலைச் செய்கிறார்கள். அப்படிச் செய்து வருகின்ற பொருட்களை எடுத்துச் செல்ல வனத் துறையினர் தடை விதிக்கிறார்கள். அந்தத் தடையை நீக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 190, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

190—

'வி' சர்வீஸ் பேருந்துகள் இயக்குதல்

***684—திரு. வ. அன்பழகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்துக் கழகங்களில் 'ஜெ' சர்வீஸ் என்றும் 'ஜெ.ஜெ.' சர்வீஸ் என்றும் பேருந்துகள் இயக்கப்படுவதை மாற்றி, மக்களுக்குக் குழப்பம் ஏற்படாமல் இருக்க பழைய முறை 'வி' சர்வீஸ் என்று மாற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க 'ஜே' 'ஜே.ஜே' 'ஆர்.ஆர்.' போன்ற வழித்தட எண்கள் மாற்றப்பட்டு புதிய வழித்தட எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் அலுவலகங்களுக்குச் செல்லக்கூடியவர்கள் உரிய நேரத்தில் செல்ல முடியவில்லை. எனவே, விரைவில் செல்ல பாயின்ட் டூ பாயின்ட் சர்வீஸ் மற்றும் எல்.எஸ்.எஸ். சர்வீஸ் பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.